# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க,
# மருத்துவ (திருத்தச்) சட்டம்

---

*(1988, ஜூலை 15 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1988 ஜூலை மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மருத்துவ (திருத்தச்) சட்டம்

[1988, ஜூலை 15 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 30/88

மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 105 ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவை திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(1) (அ) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் ; அல்லது

(ஆ) பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றின் மருத்துவமானி பட்டமொன்றையும் அத்துடன் 32 ஆம் பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றையும் வைத்திருப்பாரெனின் ; அல்லது "

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iii) முற்போந்த உட்பந்திகளின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தகைமையுடையவராக இல்லாதிருப்பாரெனின்—

(அஅ) இலங்கைப் பிரசையாகவும் ;

(ஆஆ) இலங்கைக்கு வெளியில் ஏதேனும் நாட்டின் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது மருத்துவப் பாடசாலையின் மருத்துவமானி பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றை (அப்பட்டம் அல்லது தகைமை ஆனது, அத்தகைய ஆள் அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு அல்லது மருத்துவப் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட தேதியன்று, இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் மருத்துவத் தொழிலர் ஒருவராக அதனை வைத்திருப்பவர் பதிவுசெய்யப்படுவதற்கு உரித்தாக்கும் பட்டமொன்றாக அல்லது தகைமையொன்றாகவிருத்தல் வேண்டும்) வைத்திருப்பாரெனின் ;

(இஇ) மருத்துவ அலுவலர் பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளைக் கொண்ட கூட்டுமொத்தக் காலப்பகுதிக்குத் திறமையாகவும், திருப்திகரமாகவும் சேவை செய்திருப்பாரெனின் ; அத்துடன்

(ஈஈ) பிரிவு 32 என்பதன்கீழ் மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழை வைத்திருப்பாரெனின்",

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளை இடுவதன்மூலமும் :—

"(i) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் அல்லது பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றின் மருத்துவமானிப் பட்டமொன்றை வைத்திருப்பாரெனின் ; அல்லது

(ii) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் அல்லது பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் மருத்துவமானிப் பட்டமொன்றைப் பெறுகின்றமைக்கு அவசியமான பரீட்சையில் தேறி, ஆனால் அவர்மீது அப்பட்டத்தைச் சூட்டுவதில் அப்பல்கலைக்கழகம் அல்லது பட்டமளிக்கின்ற அந்நிறுவனம் தரப்பில் ஏற்படும் தாமதம் காரணமாக அப்பட்டத்தைப் பெறாதிருப்பவரெனின் ; அல்லது"

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(iv) முற்போந்த எவையேனும் உட்பந்திகளின்கீழ் தற்காலிகமாகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையுடையவராக இல்லாதிருப்பாரெனின்—

(அ) இலங்கைப் பிரசையாகவும் ;

(ஆ) இலங்கைக்கு வெளியில் ஏதேனும் நாட்டின் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது மருத்துவப் பாடசாலையின் மருத்துவமானி பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றை (அப்பட்டம் அல்லது தகைமை ஆனது, அத்தகைய ஆள் அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு அல்லது மருத்துவப் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட தேதியன்று இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் மருத்துவத் தொழிலர் ஒருவராக அதனை வைத்திருப்பவர் பதிவு செய்யப்படுவதற்கு உரித்தாக்கும் பட்டமொன்றாக அல்லது தகைமையொன்றாக இருத்தல் வேண்டும்) வைத்திருப்பாரெனின் ;

(இ) மருத்துவ அலுவலர் பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளைக் கொண்ட கூட்டுமொத்தக் காலப்பகுதிக்குத் திறமையாகவும் திருப்திகரமாகவும் சேவை செய்திருப்பாரெனின்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் உள்ள "தோட்ட அப்போதிக்கரியொருவராக, அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தோட்டமொன்றின் தோட்ட அப்போதிக்கரியாக அல்லது தோட்டமொன்றின் அப்போதிக்கரியாகவும் பகிரங்க சேவையைச் சேர்ந்த அப்போதிக்கரியாகவும், அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) ஆளெவரும், அவர் நன்னடத்தை உடையவராகவும், அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றினால் சூட்டப்பட்டதான அல்லது வழங்கப்பட்டதான பல்வைத்தியப் பட்டமொன்றை அல்லது டிப்பிளோமா ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலொழிய, பல்வைத்தியராகப் பதிவுசெய்யப்படலாகாது".

5. பிரிவு 69 என்பதனை உடனடுத்துப் பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுவதுடன், அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 69அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 69அ என்னும் பிரிவை உட்புகுத்தல்.

"ஒவ்வொரு தவறும் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றாதல் வேண்டும்.

69. (1) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும், அச்சட்டத்தின் பொருளுக்குட்பட்டும் அதன் நோக்கத்துக்காகவும் பிடியாணையின்றி கைதுசெய்தகு தவறொன்றாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவராக இருப்பதற்கென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எவரையும் அல்லது சுகாதார சேவைகள் மருத்துவ அலுவலர் எவரையும் அமைச்சர் எழுத்தில் நியமிக்கலாம்

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும், இக்கட்டளைச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு தொடர்பாக, 1979 ஆம் ஆண்டின் 15-ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் சமாதான அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, அச்சட்டத்தின் பொருளுக்குட்பட ஒரு சமாதான அலுவலராகக் கருதப்படல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு "பல்வைத்தியர்" என்னும் வரைவிலக்கணத்திற்கு முன் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

' "பட்டம் அளிக்கின்ற நிறுவகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளை கொண்டிருக்கும்;'.